**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண். 2834/ஆ1/2025, நாள். /06/2025**

பொருள் பள்ளிக் கல்வி – 2025–2026ம் ஆண்டு ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு – நடத்துதல் – விருப்ப மாறுதல் கோரும் விண்ணப்பங்களை கல்வி தகவல் மேலாண்மை முகமையில் (EMIS) இணையத்தில் பதிவேற்றம் செய்தல் – அறிவுரைகள் வழங்குதல் – சார்பு

பார்வை
1. அரசாணை (நிலை) எண். 176, பள்ளிக் கல்வி (பக5(1)) துறை நாள். 17.12.2021
2. அரசாணை (நிலை) எண். 180, பள்ளிக் கல்வி (பக5(1)) துறை நாள். 17.10.2022
3. அரசாணை (நிலை) எண். 94, பள்ளிக் கல்வி (பக5(1)) துறை நாள். 24.05.2023
4. அரசாணை (நிலை) எண். 26, பள்ளிக் கல்வி (பக5(1)) துறை நாள். 24.01.2024
5. அரசாணை (நிலை) எண். 164, பள்ளிக் கல்வி (பக5(1)) துறை நாள். 11.07.2024
6. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.037584/சி3/இ1/2025, நாள். 18.06.2025

•••••

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின் அடிப்படையில், 2025–2026 ஆம் கல்வியாண்டிற்கு அனைத்து வகை ஆசிரியர்கள் / தலைமையாசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வினை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது எனவும் இக்கலந்தாய்வில் கல்வி தகவல் மேலாண்மை முகமை (EMIS) இணையதள வாயிலாக நடைபெறும் என்பதால் மாறுதல் கலந்தாய்வில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவிக்கும் அரசு உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களின் விண்ணப்பங்களை EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது குறித்து கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றி செயல்படுமாறு அரசு உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1. மேற்படி மாறுதல் கோரும் விண்ணப்பத்தினை 19.06.2025 முதல் 25.06.2025 வரை பிற்பகல் 6.00 வரை EMIS இணையத்தில் பதிவேற்றம் மேற்கொள்ள வேண்டும்.
2. ஒவ்வொரு தலைமையாசிரியரும் மாறுதலுக்கான விண்ணப்பத்தினை விண்ணப்பிக்கும்போது EMIS இணையத்தில் தங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட Individual Login IDஐ பயன்படுத்தி EMIS மூலம் வெளியிடப்பட்டுள்ள மாறுதல் கோரும் படிவத்தில் உரிய விவரங்களை பதிவேற்றம் செய்திடல் வேண்டும். அனைத்து விவரங்களையும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து Submit செய்திடல் வேண்டும்.
3. கணவன் – மனைவி (Spouse Priority) முன்னுரிமை மாறுதல் கோரி விண்ணப்பிக்கும் தலைமையாசிரியர்கள் அவரவர்கள் பணிபுரியும் அலுவலகம் / பள்ளி அரசு மற்றும் அரசுத் துறையின் நிருவாகத்தின் கீழ் உள்ளதா என்ற விவரத்தினையும், அதற்கான உரிய அலுவலரிடம் (Competent Authority) பெறப்பட்ட சான்றினையும் பதிவேற்றம் செய்யப்படவேண்டும். கணவன் – மனைவி பணிபுரியும் இடத்திற்கான தொலைவு 30 கி.மீ. மேல் உள்ளதை சரிபார்த்து உறுதி செய்யப்பட வேண்டும்.

4. மனமொத்த மாறுதல் (Mutual Transfer) சார்பான விண்ணப்பங்கள் பொது மாறுதல் கலந்தாய்வு முடிந்த பின்னர் விண்ணப்பிப்பது சார்ந்து அறிவுரைகள் பின்னர் வழங்கப்படும்.
5. மாறுதல் கோரி விண்ணப்பித்த தலைமையாசிரியர்களின் விண்ணப்பங்களில் தவறுகள் ஏதும் பின்னர் கண்டறியப்படின் தக்க ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
6. அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு கால அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.
7. அரசு உயர்நிலை பள்ளி தலைமையாசியர்கள் பூர்த்தி செய்யப்பட்ட தங்களின் மாறுதல் கோரும் விண்ணப்பத்தினை EMIS இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து மாவட்டக் கல்வி அலுவலகத்தில் (இடைநிலை) ஒப்படைக்க வேண்டும்.
8. அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் பூர்த்தி செய்யப்பட்ட தங்களின் மாறுதல் கோரும் விண்ணப்பத்தினை EMIS இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கையொப்பமிட்டு இரண்டு நகல்களில் இவ்வலுவலக ஆ1 பிரிவில் 26.06.2025 முற்பகல் 11.00 மணிக்குள் நேரில் ஒப்படைக்குமாறு அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

எனவே மேற்கண்ட வழிமுறைகளை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து அரசு உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வை 6–ன் செயல்முறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர்(பொ),
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள்,
அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்.

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)